**உதவி செயற்பொறியாளர்(வே.பொ), மயிலாடுதுறை அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு.ஆ.அ.செல்லக்கண் ஞானசீலன்,பி.இ(விவ),**
**செமு.எண். அ/ 952 /2019**

**நாள். 09.11.2019**

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. மு.கதிர்வேல், இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்தது – இளநிலை உதவியாளர் பதவியல் பணி வரன்முறை செய்து உத்தரவிடல் தொடர்பாக.

பார்வை:
1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண். 1012/PSD-G2/2019, நாள்: 20.02.2019 மற்றும் 27.02.2019.
2) வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண் கூடுதல் இயக்குநர் (ப.மே) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி 5/139388/2019, நாள்: 05.03.2019.
3) தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். அப2/8448/2019, நாள்: 08.03.2019.
4) செயற்பொறியாளர்(வே.பொ), நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறை ஆணை எண். அ /757/2019, நாள்: 14.03.2019.
5) கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ), தஞ்சாவூர் அவர்களின் கடித எண். அ.3214/2019, நாள்: 11.10.2019.

------

ஆணை:

பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டு முடிய நேரடித் தேர்வின் மூலம் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, பணி நியமன ஆணை வழங்கி நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு. மு.கதிர்வேல், இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) அவர்கள் பார்வை 4-ல் காணும் செயல்முறை ஆணையின்படி உதவி செயற்பொறியாளர்(வே.பொ) , மயிலாடுதுறை அலுவலகத்தில் 15.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறார்.

பார்வை 5-ல் காணும் கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ), தஞ்சாவூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. மு.கதிர்வேல் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 15.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

Scanned with CamScanner

மேலும், அவரை மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

உதவி செயற்பொறியாளர் (வே.பொ.),
மயிலாடுதுறை.

பெறுநர்:

திரு.மு.கதிர்வேல்,
இளநிலை உதவியாளர் -இவ்வலுவலகம்.

நகல்: தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ), தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: செயற்பொறியாளர் (வேபொ), நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இருப்புக் கோப்பு.

நகல்: பணிப்பதிவேடு.

நகல்: உபரி.

Scanned with CamScanner